கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பூவிருந்தவல்லி,
முன்னிலை- திரு.நா.வெங்கடேசன்,க.ப.வ., இ.க.ச., இ.நி.ச.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
2016-ம் வருடம் நவம்பர் திங்கள் 16-ம் நாள் புதன்கிழமை
சார்பு நீதிமன்ற வழக்கு எண்.14/95
**அசல் வழக்கு எண்.242/2004**

P. கிருஷ்ணமூர்த்தி ..வாதி

..எதிர்..

1. P. சிதம்பரம்
2. P. மேகநாதன்
3. சரோஜா
4. கல்யாணி
5. G. செல்வராமானுஜம்
6. Sub Registrar, Poonamallee
7. Indian Oil Corporation, Chennai
8. வேணுகோபால்
9. குணசேகரன்
10. ஏழுமலை
11. சம்பத்ராஜ்
12. செல்வராஜ்
13. மஜீத்
14. K.C. பாலன்
15. ஆர்.சீனிவாசன் ..பிரதிவாதிகள்

(The defendants 7 to 15 are impleaded as per order in I.A.343/95 and 933/95 dated 06.02.97 and amended as per order in IA 1745/97 dated 28.10.97)

WEB COPY

இவ்வழக்கு மாண்பு மிகு சார்பு நீதிமன்றம், பூவிருந்தவல்லியில் அ.வ.எண்.14/95 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.242/2004 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,

இவ்வழக்கு 22.10.2016 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்து, வாதி தரப்பில் வழக்குரைஞர் திருவாளர்கள் P. சிவமணி, எம்.கலைநாதன், எம்.கோபால் மற்றும் கே.கல்பனா அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 8 முதல் 10 வரையான பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திருமதி. மைதிலி குமாரதாஸ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 6 வரையான பிரதிவாதிகளை நீதிமன்றத்திற்கு

அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 11 முதல் 15 பிரதிவாதிகளை இவ்வழக்கில் இருந்து தள்ளுபடி செய்தும், 7-ம் பிரதிவாதி தரப்பில் திரு..சி.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதனை இந்நீதிமன்றம் பரிசீலித்து இன்று இம்மன்றம் வழங்கும்

தீர்ப்புரை

11.03.1991 தேதியிட்ட உயில்சாசனம் உண்மை அல்ல என்றும், செல்லத்தக்கது அல்ல என்றும், வாதியை கட்டுப்படுத்தாது என விளம்புகை பரிகாரம் கோரியும் அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிகள் தாவா சொத்தை பாராதீனம் செய்யவோ, வில்லங்கம் ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தின் 1/5 பாகத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க வேண்டும் என்று, வழக்கறிஞர் ஆணையரை நியமணம் செய்ய வேண்டும் என்று முதல்நிலை தீர்ப்பாணை வழங்கக் கோரியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் கடந்த கால இழப்பீடாக டிசம்பர் 1994-ல் ரூ.1000/-மும், வருங்கால இழப்பீடாக ஜனவரி 1995-ல் இருந்து மாதம் ரூ.2000/- வீதம் வாதிக்கு தரவேண்டும் என்றும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

WEB COPY

வழக்கரையின் சுருக்கம் :-

வாதியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் மறைந்த பரசுராம முதலியார் என்பவருக்கு மகன் மற்றும் மகள்கள் என்றும், பரசுராம முதலியாருக்கு நிரைய சொத்துக்கள் இருந்தன என்றும், 22.12.1976-ம் தேதியன்று குடும்பத்தினர் இடையே பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை ஏற்பட்டது என்றும், தாவா சொத்துக்கள் பாகபிரிவினை மூலம் பரசுராம முதலியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், பரசுராமமுதலியாரின் காலத்திற்கு பிறகு அவர்கள் பிரித்துக்கொள்ள வேண்டும் என்றும், பரசுராம முதலியாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் குடும்ப உறுப்பினர் அனைவரின் அனுபவத்திலும், உடமையிலும் இருந்தது என்றும், பரசுராம முதலியார் சொத்துக்களை தனியாக அனுபவிக்கவில்லை என்றும், 1990-ம் வருடம் பரசுராம முதலியாரின் மனைவி இறந்த பிறகு அவர் நல்ல உடல்நிலையில் இல்லை என்றும், அவர் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றும், அதற்கு அவர் அப்பலோ மருத்துவமணையில் சிகிச்சை பெற்றார் என்றும், 1990-ல் இருந்து படுத்த படுக்கையில் இருந்தார் என்றும், 30.11.1992-ல் பரசுராம முதலியார் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு அப்பலோ மருத்துவமணையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கு குடும்ப உறுப்பினர்கள் செலவு செய்ததாகவும், அதன்பிறகு பரசுராம முதலியாருக்கு ஒதுக்கப்பட்ட

சொத்துக்களை வாதி, 1 முதல் 4 பிரதிவாதிகளின் உடமையிலும், அனுபவத்திலும் இருந்தது என்றும், அது

கூட்டு உடமையில் இருந்ததாகவும், பரசுராம முதலியார் இறந்த பிறகு வாதி அவரது சொத்துக்களை பாகம் பிரித்து தர கோரியதாகவும், அதற்கு பிரதிவாதிகள் சரியான பதில் தரவில்லை என்றும், 2 மாதம் கழித்து முதலாம் பிரதிவாதி 11.03.1991 தேதியிட்ட உயில் சாசன நகலை அளித்ததாகவும், அதன் மூலம் வாதிக்கு எந்த பாகம் கிடையாது என்று கூறியதாகவும், அந்த உயில் செல்லத்தக்கது அல்ல, உண்மையானது அல்ல அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும், பரசுராம முதலியார் அந்த உயில் எழுதியிருக்க வாய்ப்பு இல்லை என்றும், அந்த உயில் ஆவணம் பரசுராம முதலியாரால் எழுதப்படவில்லை என்றும், பரசுராம முதலியாரின் விருப்பத்தின் பேரிலும், முழு மனநிலையில் எழுதப்படவில்லை என்றும், அது வற்புறுத்தலின் மூலமாக முழு மனநிலையில் இல்லாதபோது மோசடியாக எழுதப்பட்டது என்றும், அதனால் உயில்சாசனம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும், அது 1, 2 பிரதிவாதிகளின் தகாத நிலை செல்வாக்கின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும், பொதுக்கடனில் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் இருந்து விற்கப்பட்டு அடைக்கப்பட்டது சரி அல்ல என்றும், வாதிக்கு ஒதுக்கப்பட்ட 1/3 பங்கு கடனை அடைப்பதற்கு தனது உரிமையான சொத்தினை விற்பனை செய்து கடனை அடைத்ததாகவும், உயிலில் "சி" அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தினை வாதிக்கு ஒதுக்கப்பட்டதாக கூறி இருப்பது சரியல்ல என்றும், ராமானுஜர் கூடம் உள்ள சொத்தினை இன்று வரை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றும், வாதிக்கு பாரிவாக்கம் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தினை ஒதுக்கியதாகவும், 1, 2 பிரதிவாதிகளுக்கு பூந்தமல்லியில் உள்ள விவசாய நிலத்தினை ஒதுக்கியதாகவும், பாரிவாக்கம் கிராமத்தில் உள்ள நிலத்தின் மதிப்பை விட பூந்தமல்லியில் உள்ள நிலத்தின் மதிப்பு அதிகம் என்பதால் வாதிக்கு சிறிது அதிகம் விஸ்தீரணம் கொண்ட நிலத்தினை 1976-ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் ஒதுக்கியதாகவும், ரைஸ் மில் இன்று வரை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றும், அதில் 10 கடைகள் தெற்கு புறமாக உள்ளன என்றும், 1, 2 பிரதிவாதிகள் அதற்கு வாடகை மாதம் ரூ.3000/- வசூலிப்பதாகவும், அதிலிருந்து மாதம் ரூ.1000/- பெற வாதி உரிமையுடையவர் என்றும், அந்த சொத்தில் 1/5 பாகம் வாதிக்கு உரிமைஉடையது என்றும், பிரதிவாதிகள் மாதம் ரூ.2000/- அந்த சொத்திற்கு இழப்பீடாக வாதிக்கு தர வேண்டும் என்றும், ரைஸ்மில்லில் பாதி பங்கும், கடை மற்றும் நிலம் உள்ளடங்கிய சொத்து விவரக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2 அயிட்ட சொத்து குறித்து 24.12.1994 அன்று

WEB COPY

பிரதிவாதிகளுக்கு வாதி அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு பதில் வரவில்லை என்றும், பிரதிவாதிகள்

கூட்டாக சேர்ந்து சில ஆவணங்களை தயாரித்து, அந்த ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றும், 6-ம் பிரதிவாதி பதிவு செய்யக்கூடிய அதிகாரி என்பதால் தாவா சொத்து குறித்து எவ்வித பதிவு ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக அவரை தரப்பினராக சேர்த்ததாகவும், வாதியின் தாயார் தனபாக்கியம் என்பவருக்கு சொந்தமான 60 சவரன் நகை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றும், அவை 1, 2 பிரதிவாதிகளின் உடமையில் உள்ளது என்றும், அதிலும் 1/5பங்கு வாதிக்கு உரிமை உடையது என்றும், 7 முதல் 15 பிரதிவாதிகள் வாடகைதாரர்கள் என்றும், முதலாம் பிரதிவாதி அவரிடம் வாடகை பெறுவதினால், 7 முதல் 5 பிரதிவாதிகள் வாடகையை நீதிமன்றத்தில் கட்ட வேண்டும் என்றும் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>

வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், வழக்கு சொத்துக்கள் 22.12.1976-ல் திரு.பரசுராம முதலியார் மற்றும் அவரது வாரிசுகளாகிய வாதி மற்றும் 1 முதல் 4 வரை பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் திரு.பரசுராம் முதலியாருக்கு பாகமாக ஒதுக்கிய சொத்து என்றும், அவரது காலத்திற்கு பின்னர் இச்சொத்துக்களை வாரிசுகள் சமமாக பிரித்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு வாய்மூல உடன்படிக்கை இருந்ததாக வாதி தாவாவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், திரு.பரசுராம் முதலியார் பாகமாக ஒதுக்கிய சொத்துக்கள் மற்ற குடும்ப உறுப்பினர்களின் அனுபவத்திலும், பராமரிப்பிலும் தான் இருந்து வந்தது என்று கூறுவது தவறு என்றும், பரசுராம் முதலியார் மனைவி 1990-ல் காலமான பிறகு வாழ்நாளில் நல்ல ஆரோக்கியத்துடன் இல்லை என்றும் சொத்தை அனுபவிக்கவில்லை என்றும் கூறுவது தவறு என்றும், அவர் நல்ல மன ஆரோக்கியத்துடன் இல்லை என்றும் அப்போல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்று கூறுவது தவறு என்றும், அவர் தன் மன உளைச்சலுக்கு சிகிச்சை பெறவில்லை என்றும், அவர் பெற்று வந்த சிகிச்சைக்கான செலவினங்களை குடும்ப உறுப்பினர்கள் தான் செய்து வந்தனர் என்றும், வாதியும் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் பரசுராம் முதலியார் காலத்திற்கு பிறகு தாவா சொத்தினை கூட்டு அனுபவத்தில் அனுபவித்து வந்தனர் என்ற அனைத்து சங்கதிகளும் தவறாகும்.

திரு.பரசுராம் முதலியார் இருந்த உடன் வாதி பாகப்பிரிவினை கோரியதாகவும், பிரதிவாதிகள்

WEB COPY

உதாசின பதில் அளித்ததாகவும், இரண்டு மாதங்கள் கழித்து முதல் பிரதிவாதி 11.03.1991 தேதியிட்ட ஒரு கிரயப் பத்திரத்தின் நகலினை கொடுத்ததாகவும், தாவாவில் கூறியுள்ள சங்கதிகள் கட்டுக்கதை என்றும், ஏனெனினல் வாதிக்கு திரு.பரசுராம் முதலியார்அவரது காலத்தில் தாவா சொத்து குறித்து எழுதி வைத்த உயிலை பற்றி தெரியும் என்றும், எனவே 11.03.1991 தேதியிட்ட உயில் தவறு மற்றும் செல்லத்தக்கது அல்ல என்று வாதி கூறுவது தவறாகும் என்றும், மேலும் பரசுராம் முதலியார் நல்லமன திடத்துடனும் முழு விருப்பத்துடனும் உயில் எழுதவில்லை என்றும் அவருக்கு உயில் எழுத கூடிய அளவிற்கு உடல்நிலை இல்லை என்றும் திருட்டுதனமாக அவருடைய முழு நினைவில்லாத நிலையில் இந்த உயில் எழுதப்பட்டது என்றும், உயில் சட்டப்படி தவறு என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்று கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல என்றும், வாதிக்கு உயிலைப்பற்றிய விவரங்கள் தெரியும் என்பது தெளிவாகிறது என்றும், உயிலில் குடும்ப உறுப்பினர்கள் தான் சாட்சியாக கையெழுத்திட வேண்டும் என்பது சட்டமல்ல என்றும், மேலும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் உயில் தயாரிக்கப்பட்டது என்பது தவறாகும் என்றும், உயிலில் கண்டுள்ளபடி 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் நிதியிலிருந்து தான் சில கடன்கள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி கூறுவது போல் கடன் தொகை ரூ.20000/-த்தை அவருடைய 1/3 பாகமாக தன் சொந்த நிதியிலிருந்து வாதி கொடுத்தார் என்று கூறுவது முற்றிலும் தவறானதாகும்.

தாவா 6 மற்றும் 7 பத்திகளில் கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறாகும் என்றும், உயில் உண்மையான, சரியான, சட்டப்படியான உயில் என்பதுடன் வாதியையும் கட்டுப்படுத்தும் என்பது உண்மை என்றும், வாதிக்கு அவர் கோருவது போல் 1/5 பங்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும், வாதி பாரா 8-ல் கூறுவது போல் அரிசி ஆலை பாகம் பிரிக்கப்படவில்லை என்றும், அதற்கு தெற்காக டிரங்ரோடில் அமைந்துள்ள 10 கடைகளில் இந்த பிரதிவாதிகளுக்கு வாடகை வருமானம் வருகிறது என்றும்அதில் வாதிக்கு பங்கு உண்டு என்றும், பிரதிவாதிகள் வருங்கால இழப்பீட்டு தொகையாக ரூ.2000/-- பிரதிமாதம் வாதிக்கு பிரதிவாதிகள் தர வேண்டும் என்றும், இந்த சங்கதிகளை கூறி 26.12.1994-ல் ஒரு அறிவிப்பு வாதியால் வழங்கப்பட்டது என்றும் அதற்கு இந்த பிரதிவாதிகள் பதில் கூறவில்லை என்றும், சிவில் நீதிமன்றம் விடுமுறையில் இருந்ததால், இந்த பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து சில ஆவணங்களை தயாரித்தார்கள் என்று வாதி கூறுவது தவறு என்றும் அது வாதியால் வேண்டுமென்றே தயாரிக்கப்பட்டது என்றும், 26.12.1994 அன்று அறிவிப்பு பெற்று கொண்ட பிரதிவாதிகள் 07.01.1995-ல் பதில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றும் அதனை வாதியின் வழக்குரைஞர் 10.01.1995-ல்

WEB COPY

பெற்றுக்கொண்டுள்ளார்.

தாவா பாரா 10-ல் கூறியுள்ள சங்கதிகளிலிருந்து சில விஷயங்கள் நீதிமன்றத்தில் மறைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது என்றும், சார்பதிவாளருக்கு பத்திரத்தை பதிவு செய்வது கடமையாகும் என்றும், அதில் எந்த மறைவும் கிடையாது என்றும், சட்டப்படியான வரைமுறைக்கு உட்பட்டது தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி கூறுவது போலி வாதி பிரதிவாதிகளின் தாயாருக்கு 60 பவுன் தங்க நகைகள் இருந்தது என்றும், அதில் வாதிக்கு 1/5 பாகம் உரிமையுள்ளது என்று கூறிய சங்கதி கற்பனையாகும் என்றும், அவ்வாறு எந்த நகைகளும் அவர்களது தாயார் இறக்கும் வசம் இல்லை என்றும், 4 பவுன் சங்கிலி மட்டும் இருந்தது என்றும், அதனை பரசுராம் முதலியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது விற்றுவிட்டார் என்றும், எனவே வாதி கூறுவது போலி எந்த நகைகளும் இல்லை என்றும், தாவாவில் கூறுவது போலி அதில் பாகம் கோரவும் வழியில்லை.

தாவா சொத்து இந்து கூட்டு குடும்ப சொத்து இல்லை என்றும், அது காலம் சென்ற பரசுராமன் முதலியாரின் சொத்தாகும் என்றம், எனவே வாதிக்கு அச்சொத்தில் பாகம் கோர முடியாது என்றும், பரசுராமன் முதலியார் தன் வாழ்நாளில் 22.12.1976-ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் எழுதி அவரவர்களுக்கு பிரித்து கொடுத்து ஒப்படைத்து விட்டார் என்றும், தாவா இன சொத்துக்கள் பரசுராமன் முதலியாரின் தனிப்பட்ட சொத்தாகும் என்றும், அதனால் அவருக்கு முழு உரிமையும் பாத்தியதையும் உள்ளதால் பிரதிவாதிகளுக்கு முழு அறிவுடனும், சம்மதத்துடனும் உயிலை எழுதி வைத்துள்ளார் என்ற உயில் வாசகங்களின் மூலமாக தெளிவாகிறது என்றும், அவர் உயில் எழுதும் போதும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன், மன திடத்துடனும், முழு அறிவுடனும், நல்ல சுய நினைவுடனும் அனைத்து சட்டப்படியான வரைமுறைக்கு உட்பட்டு எவருடைய தூண்டுதலும் வற்புறுத்தலும் இன்றி உயிலினை எழுதி வைத்துள்ளார் என்றும், பிரதிவாதிகளுக்கும் அந்த உயிலை பற்றி எதுவும் தெரியாது என்றும், அவர் இறப்பிற்கு பின்னர் தான் தெரிய வந்தது என்றும், சரியான சாட்சிகள் முன்னிலையிலும், அவர் குடும்ப பத்திர எழுத்தாளர் மூலமாக இந்த உயில் சாசனமானது பரசுராமன் முதலியாரால் எழுதப்பட்டுள்ளதால் அந்த உயில் சாசனமானது உண்மையானதும், சரியானதும், சட்டப்படி நிலைக்கத்தக்கதும் என்றும், அவரது இறப்பிற்கு பின்னர் அது நடைமுறைக்கு வந்துள்ளது என்றும், எனவே பிரதிவாதிகளுக்கும் உயிலில் கூறியுள்ளது போலி உரிமை உண்டு என்றும் அதில் வாதி எச்செயலும் எடுக்க உரிமை இல்லை.

WEB COPY

தாவா 1ம் இன சொத்து 1976-ல் பாகப்பிரிவினை பத்திரத்தின்படி பரசுராமன் அதிக விஸ்தீரணம் கொண்ட சொத்தாகும் என்றும், அதனை 1983-ல் வாதிக்கும் 1 மற்றும் 2 பிரதிவாதிக்கும் 3 தனிப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்து கட்டிடங்களும் எழுதப்பட்டுள்ளது என்றும், 1976-ல் பாகபிரிவினை ஏற்பட்டதினால் வாதியும், பிரதிவாதிகளும் தாவா சொத்தினை இந்து கூட்டு குடும்ப சொத்து என்று கூற முடியாது என்றும், வாதிக்கு தனிப்பட்ட முறையில் சொத்து ஒதுக்கப்பட்டு, அவர்கள் அதை விற்றும் தனிப்பட்ட முறையில் வேறு பல சொத்துக்களை வாங்கியும் உள்ளதால் தாவா சொத்தினை கூட்டு குடும்ப சொத்து என்று கூறி பாகப்பிரிவினை வழக்கில் நீதிமன்ற கட்டணத்தை பிரிவு 37(2)(ii)-கீழ் வாதி செலுத்தி உள்ளது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், வாதி உண்மையில் பிரிவு 37(1)-கீழ் தான் நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும் ஆனால் அவர் தவறான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளதால் வழக்கு தள்ளுபடியாகவேண்டும்.

WEB COPY

தாவா சொத்து பாகப்பிரிவின் கீழ் பரசுராமன் முதலியாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் அவருக்கு உயில் எழுத உரிமை உண்டு என்றும், அதை பிரதிவாதிகளும் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவதால் வாதிக்கு அச்சொத்துக்களில் தலையிட உரிமையில்லை என்றும், ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு பாகஸ்தர்களும் சொத்தினை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்த நிலையில் மீண்டும் தற்போது வாதி பாகப்பிரிவினை கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், அவருக்கு 1/5 பாகமும் தாவா சொத்தில் கிடைக்கக் கூடியது அல்ல என்றும், மேலும் வாதி கோருவது போலி தாவா சொத்துக்களில் நஷ்டஈடும் மற்றும் வருமானமும் கிடைக்கக் கூடியது அல்ல என்றும், அவர் தாவாவில் கோரும் நஷ்டஈடும் மற்றும் வருமாணமும் அதிகப்படியானதாகும் என்றும், வாதி நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அணுகவில்லை என்றும், உண்மையான சங்கதிகளை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும், அவரால் பரசுராமன் முதலியார் துன்பத்தை அனுபவித்துள்ளார் என்றும், ஒரு கட்டத்தில் வாதி தன் தந்தையை அடிக்கவும் துணிந்தார் என்றும் அந்த உண்மை அவ்வட்டார மக்களுக்கு தெரியும் என்றும், வாதியுடைய வழக்கில் எவ்வித சட்டப்படியான சாரம்சமும் இல்லை என்றும் எனவே சட்டப்படி வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடியாக வேண்டும் என எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர் வழக்குரையின் சுருக்கம் -:</u>

தாவா 7(எ) பாராவில் கண்டுள்ளபடி தாவா சொத்தும், இதர சொத்துக்களும் மூதாதையர்களின்

சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து பரசுராமன் முதலியாரால் பெறப்பட்டது என்பதும், பரசுராமன் முதலியாருக்கு சொந்த வருமானம் எதுவும் கிடையாது என்பது முற்றிலும் தவறாகும் என்றும், வாதி 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு 1/4 பாக சொத்து கிடைக்கக் கூடியது என்று தாவாவில் கூறியுள்ளது தவறு என்றும், 22.12.1976-ன் பாகப்பிரிவின் போது வாதி இளவல் என்பது தவறு என்றும், தாவா சொத்து சட்டப்படியாக பிரிக்கப்படவில்லை என்பதால் 1976-ம் ஆண்டு பாகப்பிரிவினை செல்லத்தக்கது என்று கூறினாலும் தவறு என்றும், பாகப்பிரிவினையில் முதல் பிரதிவாதிக்கு ரூ.31423/- சொத்தும் வாதிக்கு ரூ.8950.50 மதிப்புள்ள சொத்தும் ஒதுக்கப்பட்டது என்று கூறினால் தவறு என்றும், பரசுராமன் முதலியாரின் ஈமசடங்குகளுக்கு உண்டான செலவினை வாதியே ஏற்றுக்கொண்டார் என்றும், 1 முதுல் 4 பிரதிவாதிகள் எவ்வித செலவும் செய்யவில்லை என்று கூறினால் முற்றிலும் தவறு.

வாதி தாவாவினை திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள தாவாவானது பிரதிவாதிகளை துன்புறுத்த வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாவே தவிர, அதில் எந்தவித உண்மையும் கிடையாது என்றும், பரசுராமன் முதலியாருக்கு போதுமான வருமானம் அவரது நல்ல முறையான வியாபாரத்தின் மூலம் கிடைக்கப்பெற்றிருந்தது என்றும், அது அவர் சிறந்த விவசாயி மற்றும் ஒரு வியாபாரி என்றும், அவருடைய வாழ்நாளில் அவரே அனைத்து விவசாய பணிகளையும் வியாபாரத்தையும் கவனித்து வந்தார் என்றும், நீதிமன்றத்தை திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் வாதி தவறான தகவல்களை கொடுத்து பிரதிவாதிகளுக்கு சேர வேண்டிய சொத்துக்களை அபகரிக்க இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

22.12.1976-ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை செல்லத்தக்கது அல்ல என்று வாதி எவ்வகையான விளம்புகை பரிகாரத்தையும் நீதிமன்றத்தில் கோரவில்லை என்றும், மேலும் 22.12.1976 பாகப்பிரிவினையானது ஏற்கனவே நடைமுறைக்கு வந்து பிரதிவாதிகளும் வாதியும் பாகப்பிரிவினை செய்து பல சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்றும், அதில் வாதியானவர் பாகப்பிரிவினை மூலமாக கிடைக்கபெற்ற அதிகபடியான சொத்துக்களை விற்றுள்ளார் என்றும், எனவே 22.12.1976 பாகப்பிரிவினை பத்திரமானது சட்டப்படி செல்லத்தக்கது மற்றும் அது நடைமுறைப்பட்டது என்றும்,

பரசுராமன் முதலியாரின் வாழ்நாளில் வாதிக்கும் அவருக்கும் பிரச்சனைகள் ஏற்பட்டது என்றும், அவருடைய உடலினை மயானத்திற்கு எடுத்து சென்றபோதுதான் வாதி பங்கேற்றார் என்றும், வாதி அதற்கு முன்னர் தன் தந்தையான பரசுராமன் முதலியாரின் நலனில்அக்கறை கொள்ளவில்லை

என்றும், ஏற்கனவே இப்பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதில் உரையையும் ஒரு அங்கமாக இந்த கூடுதல் எதிர்வழக்குரையை சேர்த்துக்கொள்ள இப்பிரதிவாதிகள் கோருகிறார்கள் என்றும், தாவா சொத்து விவரத்தை பற்றி வாதி கோரியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், தாவா சரியான முறையில் அனுமானிக்கப்படவில்லை என்றும் வாதியின் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4-ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையின் சுருக்கம் :-

தாவாவில் வாதி கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றும், சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், வாதி வழக்கை நிரூபிக்க கடமைபட்டவர் என்றும், அவர் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியல்ல என்றும், 22.12.1976 அன்று பாகப்பிரிவினை நடந்துள்ளது உண்மை என்றும், பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் அனைத்து பாகஸ்தர்களம் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் உரிமையை கைப்பற்றி அனுபவித்து வருகிறார்கள் என்றும், பத்திர பதிவு காலத்தில் பரசுராமன் முதலியாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் உரிமையை பற்றி அவரது காலத்திற்கு பின்னர் மற்ற பாகஸ்தர்களுக்குள் ஏற்பட்டதாக கூறும் உடன்பாடு என்று வாதி கூறுவத முற்றிலும் தவறாகும்.

தன் உயிருள்ளவரை பரசுராமன் முதலியார் நல்ல மன ஆரோக்கியத்துடன் இருந்தார் என்றும், அவர் வயதின் காரணத்தினால் சாதாரண மருத்துவ சிகிச்சை அப்போல்லோ மருத்துவமனையில் பெற்றார் என்றும், அது மனநல வியாதியும் கிடையாது என்றும், அதற்கு எவ்வித சிகிச்சையும் பெறவில்லை என்றும், அவர் 11.03.1995-ல் தன்னுடைக கன்கள்இ மகள்களுக்குள் எவ்வித பிரச்சனையும் வரக்கூடாது என்ற நல்ல எண்ணத்துடனும்,மனத்திடத்துடனும் உயிலினை எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த உயிலானது அனைவரையும் கட்டுப்படுத்தும் ஒரு உறுதியான உயிலாகும் என்றும், அந்த உயிலின் படி இந்த பிரதிவாதியானவர் தாவா 3-ம்இன சொத்தில் 50 சதவீத உரிமையை பெற்று ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றும், 1976 பாகப்பிரிவினை படி அனைத்து பாகஸ்தர்களும் சொத்தினை கைப்பற்றி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வரும் நிலையில் தாவா சொத்தானது பரசுராமன் முதலியாரின் சொந்த சொத்தாகும் என்றும், இவ்வழக்கிற்கு எவ்வித மூல காரணங்களும் இல்லை என்றும் எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7-ம் பிரதிவாதி தாக்கல் செய்யும் எதிர் வழக்குரையின் சுருக்கம் :-

தாவாவில் வாதிகோரியுள்ள சங்கதிகள் தவறு என்றும், செல்லத்தக்கது அல்ல என்றும்,

வாதி வழக்கை நிரூபிக்க கடமைபட்டவர் என்றும், இந்த பிரதிவாதியானவர் பரசுராமன் முதலியார் வசம் அவருக்கு சொந்தமான நிலத்தை M/s. Raj Agencies என்ற பெயரில் தொழில் நடத்துவதற்காக ஒரு வாடகை ஒப்பந்தம் 20 வருட காலத்திற்கு 01.04.1981 முதல் 31.03.2011 வரை செய்துகொண்டார் என்றும் முதல் 10 வருடத்திற்கு மாத வாடகை ரூ.600/- என்றும் அடுத்த 10 வருடத்திற்கு மாத வாடகை ரூ.900/- என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், தற்போது மாத வாடகை ரூ.900/- செலுத்தப்படுகிறது என்றும், திரு.பரசுராமன் முதலியார் காலமான பிறகு அவரது வாரிசுதாரர்களாகிய 3 மற்றும் 4 பிரதிவாதிகள் அவரால் எழுதப்பட்ட உயிலின் படி சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டார்கள் என்றும், தற்போது 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு தக்க பத்திரங்களை பெற்றுக்கொண்டு சரியான உரிமம் பெற்று வாடகை ரூ.900/- செலுத்துவதாகவும், இந்த நீதிமன்றம் நிர்ணயிக்கும் வாடகை தொகையை யாருக்கு செலுத்த வேண்டும் என்று கூறினாலும் செலுத்த தயாராக உள்ளதாகவும், எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

8 முதல் 10 பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையின் சுருக்கம் :-

தாவாவில் வாதி கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றும், செல்லத்தக்கது அல்ல என்றும், வாதி வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், தாவா சொத்தானது வாதிக்கும் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் மற்றும் அவரது தந்தையாருக்கும் ஏற்கனவே ஏற்பட்ட பாகப்பிரிவினைப் படி திரு.பரசுராமன் முதலியாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தாகும் என்றும் அதை அவர் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், இந்த பிரதிவாதிகளில் சிலர் அவரது வாடகைதாரர்கள் என்றும், அவரது காலத்திற்கு பிறகு 1, 2 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவின் படி 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு, 1 மற்றும் 2 பிரதிவாதிகளான பி.சிதம்பரம் மற்றும் மேகநாதன் ஆகியோர்கள் அவர்களுக்கு பரசுராமன் முதலியாரால் எழுதப்பட்ட உயிலலை பற்றி எடுத்துரைத்து ஆவணங்களையும் முறைப்படி காட்டியதனால் இப்பிரதிவாதிகள் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு அவர்களது வாடகை உரிமத்தை மாற்றி வாடகையை தவறாமல் செலுத்திவருகின்றனர் என்றும், இந்நிலையில் வாதியானவர் எப்பொழுதும் இப்பிரதிவாதிகள் வசம் வாடகை கேட்டது கிடையாது என்றும், இப்பிரதிவாதிகள் வாதிக்கு வாடகை செலுத்தியது கிடையாது என்றும், இப்பிரதிவாதிகளுக்கும் வாதிக்கும் இடையே நிலச் சொந்தகாரர், வாடகைதாரர் என்ற உறவுமுறை கிடையாது என்றும், இப்பிரதிவாதிகள் தாவா சங்கதிகளை மறுப்பதாகவும், தாவாவில் கூறப்பட்டுள்ள வழக்கு மூலம் உண்மையல்ல என்றும், அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது

என்றும், ஏற்கனவே 1, 2 பிரதிவாதிகள் செய்துள்ள பதிலுரையை இப்பிரதிவாதிகள் தங்கள்

பதிலுரையுடன் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர் என்றும், எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட சங்கதிகளின் அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன ∵

1. வாதி கோரிய 11.03.1991 தேதியிட்ட உயில்சாசனம் செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?

2. வாதி கோரிய தாவா சொத்தில் 1 / 5 பங்கு வாதிக்கு கிடைக்கக் கூடியதா?

3. தாவா சொத்து குறித்து வாதி கோரிய கடந்த கால மற்றும் எதிர்கால நஷ்ட ஈடு வாதிக்கு கிடைக்கக் கூடியதா?

4. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

01.04.2011-ல் எழுந்த கூடுதல் எழுவினா ∵

1. தாவா சொத்தில் 6/20 பங்கு வாதிக்கு கிடைக்கக் கூடியதா?

எழுவினா 1 முதல் 3 மற்றும் கூடுதல் எழுவினா 1∵

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 4 சான்றாவணங்களும், பிரதிவாதிகள் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 16 சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளன.

வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் வாதிதரப்பு வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருதரப்பு சாமாதான உடன்படிக்கையினை இன்று வரைபடத்துடன் தாக்கல் செய்தனர். அதன் அடிப்படையில் வாதி வழக்குரையில் வழக்கினை சமரச உடன்படிக்கையின் படி வழக்கை திரும்ப பெறுகிறேன் என்று வாதிகள் மேலெழுத்து செய்துள்ளார்கள். வாதிதரப்பு வழக்கறிஞர் வழக்குரையில் **"The suit may be dismissed since the plaintiff has withdrawn the same"** என்று வாதிதரப்பு வழக்கறிஞர் மேலெழுத்து செய்துள்ளார். எனவே இந்நீதிமன்றம் வாதியின் வழக்கினை திரும்ப பெறுவதாக மேலெழுத்து செய்வதாலும் அதனை உறுதியூட்டும் வண்ணமாக வாதிதரப்பு வழக்கறிஞர் மேலெழுத்து செய்துள்ளதாலும் இருதரப்பு சமாதான உடன்படிக்கையின் படி இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படுகிறது. சமாதான உடன்படிக்கை மற்றும் வரைபடம் தீர்ப்பாணையின் ஒரு பகுதியாக கருதவேண்டும்.

WEB COPY

எழுவினா 4 :-

இறுதியாக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

2016-ம் வருடம் நவம்பர் திங்கள் 16-ம் நாள் சுருக்கெழுத்தருக்கு நேரில் சொல்லி சுருக்கெழுத்தரால் வடிவமைக்கப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று இத் தீர்ப்பு என் முன்பு இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பூவிருந்தவல்லி.

வாதிதரப்பு சாட்சி :-
வா.சா.1/P. கிருஷ்ணமூர்த்தி
வா.சா.2/சிவகுமார்

WEB COPY

பிரதிவாதிதரப்பு சாட்சி :-
பி.சா.1/சிதம்பரம்
பி.சா.2/சாந்தி

வாதிதரப்பு சான்றாவணம் :-
வா.சா.ஆ.1/11.03.91/உயில் சாசனம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.2/26.12.94/வழக்கறிஞர் நோட்டீஸ்
வா.சா.ஆ.3/ .. /போஸ்டல் அக்னாலட்சுமெண்ட் கார்டு
வா.சா.ஆ.4/ .. /பரசுராமன் மருத்துவ சான்றின் நகல்கள்

பிரதிவாதிதரப்பு சான்றாவணம் :-
பி.சா.ஆ.1/25.01.95/அப்பலோ மருத்துவமனை கடிதம்
பி.சா.ஆ.2/22.12.76/பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.3/11.03.91/உயில்சாசனம் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.4/28.12.94/பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.5/15.12.03/Tr.O.P.214/2002-ன் உத்தரவின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.6/08.08.02/Civil Misc.Appeal Nos.28 to 36/2000-ன் உத்தரவின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.7/08.08.02/Civil Misc.Appeal Nos.28 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.8/08.08.02/Civil Misc.Appeal Nos.29 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.9/08.08.02/Civil Misc.Appeal Nos.30 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.10/08.08.02/Civil Misc.Appeal Nos.31 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்

பி.சா.ஆ.11/08.08.02/Civil Misc.Appeal Nos.32 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.12/08.08.02/Civil Misc.Appeal Nos.33 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.13/08.08.02/Civil Misc.Appeal Nos.34 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.14/08.08.02/Civil Misc.Appeal Nos.35 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.15/08.08.02/Civil Misc.Appeal Nos.36 /2000-ன் உத்தரவாணையின் சான்றிட்ட நகல்
பி.சா.ஆ.16/06.04.09/அ.வ.எண்.132/2000-ம் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்

கூ.மா.உ.நீ.

WEB COPY

WEB COPY